இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 34 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 27 – வியாழக்கிழமை 12 செப்டம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 34: Thiruvalluvar Year - 2055 - Aavani 27 - Thursday 12 September 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் நித்து சின்கா மற்றும் பி.ஜெ. ஃபேரன்காப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஜெப் கிண்டர், துணைத் தலைவர் கென் ஃபூ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஜாபில் மற்றும் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்!

# திருச்சி - காஞ்சிக்கு 2,666 கோடி ரூபாய் புதிய முதலீடுகள்!

## சிகாகோவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

**சிகாகோ, செப். 12 -**

**ஜாபில் மற்றும் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனங்களுடன் ரூ.2,666 கோடி முதலீட்டில் 5365 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஜாபில் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கும், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் 666 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணுஉற்பத்திநிறுவனவிரிவாக்கத்திற்கும் மற்றும் ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில் துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டின் மகத்தான வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அதன்மூலம் தொழில் வளர்ச்சியை சிறப்புற உயர்த்தி, தமிழ் மக்கள் அனைவருக்கும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் சிறப்பான வாழ்க்கை நிலையை ஏற்படுத்திட வேண்டும் என்ற குறிக்கோளோடு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் 9.9.2024 அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 666 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிளேக் மோரெட், முதுநிலை துணைத் தலைவர் ராபர்ட் பட்டர்மோர், துணைத் தலைவர் எட்வர்ட் மோர்லான்டு, இயக்குநர் முத்துகுமரன் பிச்சை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**தமிழ்நாடு அரசின் தொழில்துறை முன்னெடுப்புகள்!**

இப்பெருமை நிலை பெறவும், பெரும் அளவிலான முதலீடு களை ஈர்த்து தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காகவும் தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில், உலகின் 14 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் 4350 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**ஜாபில் நிறுவனம் (Jabil Inc.)**

அதன் தொடர்ச்சியாக 9.9.2024 அன்று சிகாகோவில், ஜாபில், ராக்வெல் ஆட்டோமேஷன் மற்றும் ஆட்டோடெஸ்க் நிறுவனங்களுடன் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் விவரங்கள் வருமாறு :-

ஜாபில் நிறுவனமானது, ஆப்பிள், சிஸ்கோ, ஹெச்பி, டெல் போன்ற முன்னணி நிறுவனங்களுக்கு எலக்ட்ரானிக்ஸ் தொழில் உற்பத்தி சேவைகள் மற்றும் தீர்வுகளை வழங்குபவர்களில் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம் சீனா, இந்தியா, மலேசியா, மெக்சிகோ, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில்


தொடர்ச்சி 4ஆம் பக்கம்


# நாடாளுமன்றக் குழுக்களை அமைப்பதில் தாமதம் ஏன்?

## எதிர்க்கட்சிகள் கண்டனம்!

புதுடெல்லி, செப். 12 -

எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதால் துறை வாரியான நாடாளுமன்றக் குழுக்களை அமைப்பதில் ஒன்றிய அரசு தாமதம் செய்வதாக காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் முடிந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் துறை வாரியான நாடாளுமன்ற குழுக்கள் அமைக்கப் படவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு 98 இடங்களும், ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை 249 ஆகவும் உள்ளது.

இதில் குறைந்தது 6 துறைகளின் நாடாளுமன்ற குழுக்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களை தலைவர்களாக நியமிக்க வேண்டும். ஆனால், அதற்கான நியமன அறிவிப்புகள் இன்னும் வெளியாகவில்லை. நிதி உள்ளிட்ட முக்கிய துறைகளை பா.ஜ.க. வைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதால் துறை வாரியான நாடாளுமன்றக் குழுக்களை அமைப்பதில் ஒன்றிய அரசு தாமதம் செய்வதாக காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது. உள்துறை, பாதுகாப்பு, வெளியுறவுத் துறைகளை வழங்க வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே துணை சபாநாயகர் நியமன விவகாரத்தில் ஒன்றிய அரசு மவுனமாக உள்ளது.

எதிர்க்கட்சிகளுக்கு வழங்க வேண்டிய இந்தப் பதவியை கடந்த ஐந்து ஆண்டுகள் பா.ஜ.க. அரசு காலியாகவே வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பொங்கல் பண்டிகைக்கு ரயில் டிக்கெட் முன்பதிவு!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, செப். 12 –

பொங்கல் பண்டிகைக்கு, ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று (12ந் தேதி) முதல் தொடங்குவதாக தென்னக ரயில்வே அறிவித்துள்ளது. தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களில் சொந்த ஊர்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக, கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கவும் ரயில் டிக்கெட் முன்பதிவு 120 நாட்களுக்கு முன்பே தொடங்குவது வழக்கம்.

அதன்படி, 2025ம் ஆண்டு ஜனவரி 13ஆம் தேதி போகி பண்டிகையும், 14ம் தேதி பொங்கல், 15ம் தேதி மாட்டுப்



பொங்கல், 16ம்தேதி காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்குச் செல்வோரின் வசதிக்காக, ரயில் டிக்கெட் முன்பதிவு இன்று (12ம் தேதி) முதல் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, ஜனவரி 10ம் தேதி பயணம் செய்ய விரும்புவோர், செப்டம்பர் 12ம் தேதியும், ஜனவரி 11ல் பயணம் செய்ய விரும்புவோர் செப். 13ம் தேதியிலும், ஜனவரி 12ல் பயணம் செய்ய செப். 14ம் தேதியும் டிக்கெட் முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ளலாம்.